★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 20 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆனி 8உ வியாழன் (21—6—56) ★ ★ வெளியூர்: ஆனி 9உ வெள்ளி (22—6—56) [இதழ் 6

பொதுக்குழாயில் தண்ணீர் குடிக்க அரிசனருக்கு மறுப்பு

இரயில்வே போலீஸ் அதிகாரி மீது வழக்கு

பாட்டியாலா, ஜூன் 21—

இரயில்வே நிலையத்திற்கு அருகிலிருந்த ஒரு பொதுக்குழாயில், தண்ணீர் குடிப்பதற்கு ஒரு அரிசனருக்கு அனுமதி அளிக்க மறுத்ததாக இரயில்வே போலீஸ் துணை சூப்பிரண்டெண்ட் ஜஸ்டாசிங்மீது, பெப்சு சர்க்காரின் பிற்பட்ட வகுப்பினர் இலாகா தனி அதிகாரி நிர்மல்சிங், புகார் கொடுத்துள்ளார். தீண்டாமைக்

(4-ம் பக்கம் பார்க்க)

'நாடு சிறிதானால் பெரிய நாடுகளுக்கு அடிமையாகி விடாதா?'

விநோபாவின் சந்தேகத்திற்கு அண்ணா தந்த பதில்!

'வட நாடு நெய்யும்—பருப்பும் உண்ணும்போது தென்னாடு கம்பங் கூழ் உண்ண உபதேசமா?'

'வரலாற்றில் இல்லாத பாகிஸ்தான் அமைந்தான பிறகு திராவிட நாடு தர மறுப்பது என்ன நியாயம்?'

பரமக்குடியில் அண்ணா பேருரை

" நல்லதோர் வாழ்வை நாம் பெறமுடியாது தடுத்து, 'அகில இந்தியா' என்ற பெயரால், வடநாட்டிற்கு தென்னாட்டைக் காட்டிக் கொடுக்கும் காங்கிரசின் தன்மைகளை மக்களுக்குச் சுட்டிக் காட்டித்தான், தேர்தலில் கழகம் ஈடுபடுகிறது

" 'தேர்தலில் ஒரு கை பார்க்கிறேன்' என்று காமராசர் பேசுகிறார்—காங்கிரசிடமுள்ள பணபலத்தையும், பத்திரிகை பலத்தையும் நம்பிக்கொண்டு! ஆனால், இந்தமுறை தேர்தலின்போது காங்கிரஸ், ஏழை எளிய மக்களை அணுகித்தானாக வேண்டும்; அவர்களைக் கெஞ்சித்தான் ஆக வேண்டும்; அப்போது அந்த ஏழை மக்கள், 'கடந்த எட்டாண்டுகளாக எங்களுக்கு என்ன செய்தீர்கள்? முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவு செய்யப்பட்ட ரூ. 2,300 கோடியில், தென்னாட்டிற்கு எவ்வளவு செலவு செய்யப்பட்டது? இரண்டாம் திட்டத்தில் ரூ. 6,800 கோடி செலவிடப் போகிறீர்களாமே, இதில் எங்கள் வாழ்வு முன்னேற எவ்வளவு தொகை கிடைக்கவிருக்கிறது? கல்கத்தாவில் சித்தரஞ்சனில் எஞ்சின் தொழிற்சாலை வைத்து பெரம்பூரில் கோச்' பெட்டித் தொழிற்சாலை வைத்து, எஞ்சின் பின்னால் பெட்டி செல்வதுபோல, வடநாட்டின் பின்னால் தென்னாடு போய்க்கொண்டிருக்கும் நிலை ஏன் ஏற்பட்டது? இங்கே உள்ளவர்கள் உங்களுக்குத் துதி பாடினால் மந்திரியாக்குகிறீர்கள்; துதி பாடாவிட்டால் தூற்றுகிறீர்கள்; சிறைக்கு அனுப்புகிறீர்கள்; நியாயமா?'—என்றெல்லாம் கேட்கத்தான் போகின்றனர், ஏழை மக்கள்—காமராசரையும், காங்கிரசையும் பார்த்து!

" இதற்கெல்லாம் பதில் சொல்லாமல், காமராசர் நினைக்கிறபடி காங்கிரஸ் வெற்றி பெற்றுவிட முடியாது!

" இந்தத் தலைமுறையினர்—சந்ததியினர் ஏமாந்து விட்டால், இனி என்றென்றைக்கும் திராவிடர்கள், வடவருக்கு அடிமைப்பட்ட நிலையில்—'தோதவர்'களைப்போல, 'குடுகுடுப்பைக்காரர்'களைப்போல, ஆப்பிரிக்க நாட்டு 'நீக்ரோவர்'களைப்போல நாடோடிகளாய்—அடிமைகளாய்—வாழ்ந்து தீரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும் என்பதால், வீரமிக்க பரம்பரை வழிவந்த நாம், தாயகத்தை மீட்கப் போரிட்டாக வேண்டும்—அதுவும் உடனடியாக என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்,"

—என்று, அண்ணா அவர்கள், 14—6—56 இரவு, பரமக்குடியில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார் அவரது சொற்பொழிவின் ஒரு பகுதி நேற்று வெளிவந்தது; மறுபகுதி இங்கு தரப்படுகிறது:—

"காமராசர் இந்த பரமக்குடி நகருக்கு வருவதாக வைத்துக் கொள்வோம்; அப்போது இங்குள்ள பஞ்சாயத்து போர்டார் அவருக்கு ஒரு வரவேற்புத் தந்து, அந்த வரவேற்பில்—பரமக்குடியில் ஒரு விஞ்ஞானக் கல்லூரி வேண்டும் என்றோ, அல்லது, ஆற்றைக் கடக்க ஒரு பாலம் வேண்டும் என்றோ கேட்பதாக வைத்துக் கொள்வோம்.

"வரவேற்பிற்குப் பதிலளிக்கும் போது காமராசர், 'ஆகட்டும் பார்க்கலாம்' என்று கூறிவிட்டுச் செல்கிறாரே தவிர, 'விஞ்ஞானக் கல்லூரியா வேண்டும்? எஞ்சினியர்களைக் கூப்பிடுங்கள்—திட்டம் தீட்டலாம்; அதிகாரிகளை அழைத்து வாருங்கள்—இடம் தேடலாம்; எவ்வளவு இலட்சம் பணம் தேவை என்று கூறுங்கள்—ஒதுக்கித் தருகிறேன்,' என்று கூறிட முடிவதில்லை!

" காமராசருக்கு, இந்தக் காரியங்களைச் செய்யவேண்டும் என்கிற நல்லெண்ணம்கூட இருக்கலாம்; ஆனால், காரியம் சாதிக்க டில்லியின் அனுமதி அல்லவா வேண்டியிருக்கிறது?

" இங்கே உள்ள மந்திரிகள் பெயரளவுக்குத்தான் மந்திரிகள்! இவர்கள் நிறைவேற்றுகிற எந்தச் சட்டமும், திட்டமும், டில்லியின் 'அதிகார முத்திரை' பெற்றால்தான் நாட்டில் செல்லக்கூடியதாக அமைந்திருக்கின்றன! இந்த நிலை 1947ல் கிடைத்ததாகச் சொல்லப்படும் சுதந்திரத்திற்குப்பின் வந்ததுதானே? இந்த நிலை ஏன் வந்தது?

"காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை, கராச்சி முதல் கல்கத்தா வரை இந்தப் பரந்த உபகண்டம்—'இந்தியா ஒரே நாடு' என்று சாதிக்கப் பார்க்கிறார்கள்; 'வடக்கும்—தெற்கும் ஒன்றுதான்; வடவரும்—தென்னவரும் வேறு வேறு மக்கள் அல்லர்' என்று கூற நினைக்கிறார்கள்! ஆனால், நடைமுறை என்னவோ, 'வடக்கு வேறு—தெற்கு வேறு' என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொண்டிருக்கிறது!

"மதுரையில் தமிழ்ச் சங்கப் பொன்விழா நடைபெற்றதுபற்றி நீங்கள் அறிந்திருக்கலாம்; அந்த விழாவில், சென்னை கவர்னர் பிரகாசா அவர்களை, பாண்டித் துரைத் தேவர் படத்தைத் திறந்து வைக்குமாறு கேட்டிருந்தனர்; படத்தைத் திறந்துவைக்கும்போது பாண்டித் துரைத் தேவர் என்று கவர்னரால் கூறமுடியவில்லை; அந்தப் பெயரை அவரால் சரியாக உச்சரிக்க முடியவில்லை!

"காங்கிரசார் எவ்வளவுதான் மறைக்கப் பார்த்தாலும், வடநாட்டவரும் நாமும் அன்னியர்கள்தான் என்ற உண்மையை ஒளித்துவிட முடியாது என்பதைத்தானே, கவர்னர் பட்ட கஷ்டம் சொல்லுகிறது?

" இன்று—1947-க்குப் பிறகு, வடநாட்டோடு இணைக்கப்பட்டிருக்கும் தென்னாடு—திராவிடம், வேறெந்தக்காலத்திலாவது வடநாட்டிற்கு அடிமைப்பட்டிருந்ததுண்டா? இன்று மட்டும் இந்த அடிமை நிலையை திராவிடர் ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்? நமது நாட்டை நமது மூதாதையர்கள் — முன்னோர்கள், எவருக்கும் அடிமையாகாதவாறு உரிமையோடு கட்டிக் காத்து அரசோச்சியிருக்கிறார்கள் என்பதற்கு நம்மிடம் வரலாறு உண்டு.

"இப்படி கடந்தகால வரலாற்றில் வேறெப்போதும் இல்லாத வகையில், தென்னாடு—திராவிடம், 1947-க்குப் பிறகு அடிமைப்பட்டிருப்பது, தாயகப்பற்றுக்கொண்டோரால் பொறுத்துக் கொள்ளத் தக்கது அல்லவே!

"எனவேதான், இந்தப் புதிய அடிமை நிலையிலிருந்து நாம் மீளவேண்டும். நமது நாடு, வடவர் பிடியிலிருந்து மீட்கப்பட வேண்டும் என்று தி. மு. கழகம் போராடி வருகிறது.

"டெல்லியின் ஆட்சி, திராவிடருக்கு நல்லாட்சியாக—நல்வாழ்வு நல்கும் ஆட்சியாக இருக்கவில்லை; என்றைக்கும் இருக்கவும் முடியாது!

"நம்முடைய வண்டியின் லகானை வேறொருவரிடம் தந்துவிட்டு, நாம் எப்படி, பாதுகாப்பாகப் பிரயாணம் செய்வதாகக் கொள்ளமுடியும்?

"நமது மாநில சர்க்கார், டில்லி சர்க்காரின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டது என்ற நிலை, வண்டியின் 'லகான்' பிறிதொருவரிடமிருப்பதற்குச் சமமானதுதானே!

"நம் மாநில சர்க்கார் டில்லிக்குக் கட்டுப்பட்டிருப்பது, இத்துறையில் மட்டுமல்ல!

"நமக்கு வீடு இருந்தால், பஞ்

(4-ம் பக்கம் பார்க்க)

'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறது?'

74—பேர்களுடன் கடலில் மூழ்கியது விமானம்?

நியூயார்க், ஜூன் 20—

74 பேர்களை ஏற்றிச்சென்ற விமானமொன்று தீப்பற்றி எரிந்து அட்லாண்டிக் கடலில் நொறுங்கி வீழ்ந்துவிட்டது.

விபத்தில் சிக்கியோரை மீட்பதற்கெனச் சென்ற கப்பல்கள் விபத்தில் உயிர்தப்பியோரை தருவித்துருவி தேடியும் ஒருவரும் அகப்படவில்லையாம். விமானத்தின் உடைந்த பாகங்கள் சிலவும், இரு மனித பிரேதங்களும்தான் காணக் கிடைத்ததென்று அறிவிக்கப்படுகிறது.

பதவியிலிருந்து விலக அனுமதி மறுப்பு

பம்பாய் ரெவினியூ அமைச்சர் பி. எஸ். ஹிரே, சபாநாயகர் குந்தே ஆகியோர் மகாராட்டிர மாநிலப் பிரச்சினை மீது இராஜினாமாச் செய்வதற்கு, காங்கிரஸ் மேலிடம் அனுமதி தர மறுத்து விட்டதாம்!

சென்னை நகரசபை கமிஷனராக முதலமைச்சர் காமராசரின் அந்தரங்கச் செயலாளர் தோழர் டி. பாலசுந்தரம் (ஐ. ஏ. எஸ்.) அவர்கள், மூன்றாண்டுக் காலத்திற்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிகிறது.

ஆந்திரா, பம்பாய், திரிபுரா, வடகிழக்கு எல்லைப்புற ஏஜென்சி ஆகிய மாநிலங்களின் பாதை அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்திய சர்க்கார் மொத்தம் ரூ. 42, 63,-00,000 அனுமதித்துள்ளனர்.

'இந்திய கம்யூனிஸ்டுகள் குழம்பிக் கிடக்கிறார்கள்'

'எதற்கும் இரஷ்யாவையே எதிர்நோக்கும் இவர்கள் சுயசிந்தனையற்றவர்கள்'

'சிந்திப்பதென்பதே கம்யூனிஸ்டுகளுக்கு கடினமான காரியம்'

இந்திய கம்யூனிஸ்டுகளுக்கு பிரதமர் நேரு அர்ச்சனை

புதுடில்லி, ஜூன் 20—

"குழம்பிய சிந்தனையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி இருந்துவருகிறது. உலகப் பிரச்சினைகளில் தனக்கே உரிமையுடைய ஒரு கருத்தையும் அக்கட்சி கொண்டிருக்கவில்லை.

"கடந்த காலத்தில், அனைத்திற்கும் மாஸ்கோவையே அக்கட்சி எதிர்நோக்கிக் கொண்டிருந்தது; அங்கு நிகழ்பனவற்றை எல்லாம் ஆதரித்து வந்தது.

"சென்ற சில மாதங்களில் இரஷ்யாவில் விரிவான மாற்றங்கள் ஏற்பட்டதிலிருந்து, இந்திய கம்யூனிஸ்டுகள் ஒரே கலக்கத்தில் உள்ளனர்; அதன் பலனாக, தாங்கள் இப்பொழுது எந்த வேடத்தைப் போட்டுக்கொள்ளுவது என்று தெரியாது விழிக்கிறார்கள்.

"இந்திய கம்யூனிஸ்டுகள் இதற்கு முன்னர், தங்கள் சிந்தனையைச் செயலாற்றியதே கிடையாது; இரஷ்யாவின் கட்டளைகளைக் கண்மூடிப் பின்பற்றுவதில் மனநிறைவு கொண்டிருந்தனர்.

"ஆனால் இப்பொழுதோ, இரஷ்யாவில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அவர்களைச் சுயமாக சிந்திக்க வைத்திருக்கிறது; ஆனால், அவ்வாறு சிந்திப்பது ஒரு கடினமான முறையாக அவர்களுக்குத் தென்படுகிறது."

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் நடைமுறை பற்றிய தமது கருத்தை இந்தியப் பிரதமர் நேரு, இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் தீவிரமாகத் தாக்கியுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 21—6—'56 வியாழன்

வித்திற்கு வெந்நீர் பாய்ச்சுவதா?

வீண் பணச் செலவைத் தவிர்க்கவும், விரும்பத் தகாத நிலைமைகள் அரசியல் வாழ்வில் இடம் பெறுவதைத் தடுக்கவும், இப்பொழுது கையாளப்பட்டு வரும் நேர்முகத் தேர்தல் முறைக்குப் பதிலாக மறைமுகத் தேர்தல் முறையை மேற்கொள்ளலாமா எனத் தீவிரமாகத் தாம் யோசித்து வருவதாக, இந்தியப் பிரதமர் நேரு, உத்திர பிரதேச காங்கிரஸ் ஊழியர் மாநாட்டில் உணர்த்தி இருக்கிறார். அந்த ஏற்பாட்டில் மறைந்து கிடக்கும் சனநாயக ஒழிப்பை நேற்று விளக்கிஇருந்தோம். இன்று, அதைத் தொடர்ந்து மேலும் சில கூறுகிறோம்.

சென்னை போன்ற பெரும் நகரங்களிலும், சிறு நகரங்களிலும் உள்ள வாக்காளர்களின் தொகை, மாகாணம் முழுதும் உள்ள மொத்த வாக்காளர்களின் தொகையில் ஒரு சிறுபகுதியேயாகும். பெரும் தொகை வாக்காளர்கள் பேரூர் சிற்றூர் பகுதிகளிலேயே மிகுதியும் இருந்து வருகின்றனர்.

பெரிய—சிறிய நகரப் பகுதிகளில் உள்ள வாக்காளர்களுக்கும், பேரூர் சிற்றூர் பகுதிகளில் உள்ள வாக்காளர்களுக்கும் அரசியல் அறிவிலும் விழிப்புணர்ச்சியிலும் கணிசமான வித்தியாசம் உண்டு. எல்லாத் துறைகளிலும் பின்தங்கிக் கிடப்பது போன்றே, அரசியல் துறையிலும், நகர மக்களைக் காட்டிலும் கிராம மக்கள் பன்மடங்கு பின்தங்கிக் கிடக்கிறார்கள் என்பது ஒப்பமுடிந்த உண்மையாகும்.

அதற்காக கிராம மக்கள்மீது குற்றஞ்சாட்டுவதாகக் கொள்ளக்கூடாது. அந்தக் குறைபாட்டிற்கு நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் கிராம மக்கள் அல்லர். வரலாறும், பொதுவாக அரசியல் கட்சிகளின் குறிப்பாக காங்கிரஸ் கட்சியின் கவலைக்குறைவும் கிராம மக்களிடம் நீடித்து இருந்துவரும் அரசியல் பிற்போக்கிற்குக் காரணங்களாகும்.

நகர வாக்காளர்களைக் காட்டிலும் கிராம வாக்காளர்களே, மொத்த வாக்காளர் தொகையில் பெரும்பகுதியினராவர் என்று முதற்கண் குறிப்பிட்டோம். பெரும் எண்ணிக்கையில் இருந்துவரும் கிராமப் பகுதி வாக்காளர்களோ அரசியல் அறிவிலும், விழிப்புணர்ச்சியிலும் பின்தங்கிக் கிடக்கிறார்கள் என்பதையும் எடுத்துக் காட்டினோம்.

ஒரு மாகாண சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் மொத்த உறுப்பினர்களில் அநேகப்படியான உறுப்பினர்கள் பேரூர் - சிற்றூர் பகுதிகளிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களாவர். நகரப் பகுதிகளில் இருந்து சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகுதியும் குறைவாகும். இரண்டு பகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஒப்பவைத்து நோக்கினால், கிராமத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களில், மிக மிகக் குறைந்த சதவிகிதத்தினரே நகரப் பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படக்கூடிய உறுப்பினர்களாக இருப்பர்.

நகரப் பகுதிகளைக் காட்டிலும் கிராமப்பகுதிகளில் உள்ள வாக்காளர்கள் அரசியல் விழிப்பில் பின்தங்கிக் கிடக்கிறார்கள் என்பதுடன் நிலைமை நின்றுவிடவில்லை. எழுத்தறிவிலும் கிராம வாக்காளர்கள் கடைநிலையில் இருந்துவருகிறார்கள். அதுவுமன்றி, அரசியல் துறை பற்றி பிறருடன் அளவளாவி அறிவு பெறும் வாய்ப்பும் நகர மக்களுக்கு இருப்பது போன்று கிராம மக்களுக்கு அறவே கிடையாது.

நகர வாக்காளர்களிடை இருந்துவரும் அரசியல் விழிப்புணர்ச்சியும், தேவைப்படும் வகையில் வளமுடையதாக இருக்கவில்லை என்றக் குறைபாடு இன்றும் இருந்து வருகிறது. இவர்களும், தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வாக்குரிமையைத் தக்க முறையிலும், திறமையாகவும் பயன்படுத்துவதில்லை என்று குறைகூறப்பட்டு வருவதையும் அனைவரும் அறிந்தே இருக்கின்றனர்.

அரசியல் அறிவும், விழிப்புணர்ச்சியும் அறவே இல்லாது இருக்கிற கிராமப்புற வாக்காளர்களையும், அந்த இரண்டையும் குறைவான அளவில் கொண்டு இருக்கின்ற நகர வாக்காளர்களையும், அடிப்படையாகக்கொண்டு செயல்பட்டு வருவதுதான் நமது சனநாயகமாகும். இந்த சனநாயகம் மேலும் செம்மையுற ஆண்டுகள் பல செல்லும். அந்தக் கால அளவு கூடுவதும் குறைவதும் மக்களிடை உருவாகும் அரசியல் அறிவின் கால அளவைப் பொறுத்து இருக்கிறது.

அதற்குள்ளாக பணச் செலவையும், விரும்பத் தகாத அரசியல் நிலைமைகளையும் காரணங்களாகக் காட்டி, நேர்முகத் தேர்தலை ஒழித்து மறைமுகத் தேர்தலை மேற்கொள்ள முனைந்தால், செயல்பட்டுவரும் பெயரளவு சனநாயகமும சமாதி ஆகிவிடும். அச்சமாதியின் மேல்ஒரு கட்சி சர்வாதிகாரம்தான் தலைதூக்கி நிற்கும்.

அரசியல் அறிவும், விழிப்புணர்ச்சியும் அறவே இல்லாததுடன், எழுத்தறிவும் குறைவாக இருந்துவருகிறது பேரூர்-சிற்றூர் மக்களிடம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அதுவுமன்றி, சிறந்த ஊராட்சித்துறைக்குத் தேவைப்படும் பொது அறிவும் இல்லாதிருக்கிறது என்பதை நாம் ஒப்பித்தான் ஆகவேண்டும்.

இப்பொழுது ஊராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட்டு வரும் போக்கும், தேர்தல் காலங்களில் வெற்றி பெற அபேட்சகர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் வெறுப்பளிக்கத்தக்கவைகளாகும். முடிவாக வெற்றிபெற்ற அபேட்சகர்கள் எந்தப் பலத்தின் துணையால் வெற்றிபெற்றுர்கள் என்பதும் வன்மையாகக் கண்டிக்கத் தக்கதுமாகும்.

பழைமைப் பித்து, சாதி வெறி, பணக் கொழுப்பு, அதிகார ஆணவம், நாட்டாண்மை, ஆகிய 'பஞ்சசீலங்'களுந்தான் ஊராட்சி மன்றத் தேர்தலில் ஈடுபடும் ஒருவருக்கு வெற்றி தேடித் தரும பக்கத் துணைகளாக இருக்கின்றன. இவைகளின் அருந்துணை கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் அமைந்துள்ள ஊராட்சி மன்றங்களை, சட்டசபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் நிறுவனங்களாகக் கொள்ள முன்வருவது, வேதனை தரும் விசித்திரமாகும்.

எனவே, இடப்பட்டுள்ள சனநாயக வித்துக்கு, நேர்முகத் தேர்தல் என்னும் தண்ணீர் பாய்ச்சுவதற்குப்பதிலாக, மறைமுகத் தேர்தல் என்னும் வெந்நீரைப் பாய்ச்ச முற்படுவதா? கூடாது! கூடாது! முக்காலும் கூடாது!

மராட்டிய காங்கிரசார் எழுச்சி!

பதவிகளைத் துறக்க முடிவு

புதுடில்லி, ஜுன் 19—

கடந்த ஞாயிறன்று மகாராஷ்டிர பிரதேச காங்கிரசுக் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானத்தின்படி பம்பாய் ரெவினியூ மந்திரி பி. எஸ் ஹிரே, தம் பதவியை விட்டு விலகுவதற்கு எடுத்துக்கொண்டுள்ள முயற்சியைக் காங்கிரசு மேலிடம் ஆதரிப்பதாகத் தெரியவில்லையாம்!

ஹிரேயும், பம்பாய் சட்டசபை சபாநாயகர் குண்டேவும் தம் பதவிகளை இராஜிநாமா செய்வதற்குக் காங்கிரசு மேலிடத்தில் அனுமதி பெறுவதற்கு இன்றிரவு புதுடில்லிக்குப் போகின்றனர்—அவர்கள் காங்கிரசுத் தலைவர் தேபரையும், உள்நாட்டு இலாகா மந்திரி பண்டித பந்தையும் சந்தித்துத் தம் கருத்தைத் தெரிவிப்பர் எனத் தெரிகிறது

ஆனால் காங்கிரசு மேலிடம், இப்படிப்பட்ட இராஜிநாமாக்கள் இப்போதுள்ள சூழ்நிலையில் விரும்பத்தக்கதில்லை என்றும், அதனால் காங்கிரசு இயக்கத்தில் கட்டுக்கோப்புக் குலையும் என்றும் கருதுவதாகத் தெரிகிறது.

காங்கிரசு மேலிடம் அவர்களை இராஜிநாமா செய்ய வேண்டாமென்று கூறுவதோடு. பம்பாய் குறித்து அரசாங்கம் செய்திருக்கும் முடிவை உண்மையான காங்கிரசுக்காரர் என்ற முறையில் ஏற்றுக்கொள்ளும்படியும் கேட்கும் என்று தெரிகிறது.

ஹிரே பதவியை விட்டு விலகினால் அதனால் குழப்பமான நிலைமை ஏற்படுவதோடு மற்ற மகாராஷ்டிரக் காங்கிரசுத் தலைவர்களும் இராஜிநாமாச் செய்யக் கூடும் என்று காங்கிரசு மேலிடம் கருதுவதாகத் தெரிகிறது.

மத்திய அரசாங்க நிதி மந்திரி தேஷ்முக்கின் விலகல் குறித்துக் காங்கிரசு மேலிடம் அனுமதி கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும், காரணம், அவர் காங்கிரசின் கூட்டு உறுப்பினர் என்றும், ஆனால், பம்பாய் ரெவினியூ மந்திரி ஹிரே, காங்கிரசின் மேலிடத்து அனுமதியைப்பெற்றே தம் பதவியை இராஜிநாமாச் செய்யவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது.

'கலை, சட்டக் கல்லூரிகளை 10 ஆண்டுகளுக்கு மூடுக'

லோகியா கூறுகிறார்

ஐதராபாத், ஜுன் 19—

"இந்தியாவில் உள்ள எல்லா கலைக்கல்லூரிகளும், சட்டக் கல்லூரிகளும் 10 ஆண்டுகளுக்கு மூடப்படவேண்டும்; அந்தக் காலத்தில், இந்தக் கல்லூரிகளுக்குப் பதிலாக பொறி இயல் 'பாலி டெக்னிக்' கழகங்களும் துவங்கப்பட வேண்டும்," என்று, சோஷலிஸ்டு கட்சித் தலைவர் டாக்டர் ராம்மனோகர் லோகியா ஒரு யோசனை தெரிவித்துள்ளாராம்.

'மாணவர்கள் ஒரு தொழிலைக் கற்று, அதைச் செயலில் நிறைவேற்றும்படியான ஒரு சூழ்நிலை ஏற்படவேண்டும்' என்றும் லோகியா கூறினாராம்.

புதிய தொழில்துறை நிறுவனங்களை நிறுவுவதற்காக 1955-56ல் 164 'லைசென்சு'கள் கொடுக்கப்பட்டன, முந்திய ஆண்டில் 110 'லைசென்சு'கள் கொடுக்கப்பட்டன.

நெருக்கடி முற்றுவதின் எதிரொலி?

சர்வகட்சி தேசீய அரசாங்கம் நிறுவ பாக். பிரதமர் ஆலோசனை?

கராச்சி, ஜுன் 19—

பாகிஸ்தானில் எல்லாக் கட்சிகளும் கூடிய தேசீய அரசாங்கம் அமைப்பதுபற்றி மந்திரி சபையில் கூடியவிரைவில் விவாதிக்கப்படும் என்று பிரதமர் சௌத்ரிமுகம்மது அலி, அறிவித்துள்ளார்.

அவர், பத்திரிகை நிருபர்களுக்கு அளித்தபேட்டியின்போது, தேசீய வாழ்க்கையில் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்பதே தமது நோக்கம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்போது பாகிஸ்தானின் மத்திய அரசாங்கம் முஸ்லிம் லீக், ஐக்கிய முன்னணி ஆகிய இரண்டு கட்சிகளின் கூட்டு முயற்சியில் அமைக்கப்பட்டுள்ளது; மேற்கு பாகிஸ்தானில் உள்ள குடியரசுக் கட்சி, கிழக்கு பாகிஸ்தானிலுள்ள அவாமி லீக் என்ற இரண்டும் பாகிஸ்தானிலுள்ள வேறு இரண்டு பலம் பொருந்திய கட்சிகளாகும்.

சென்னைக்கு உடனடியாக அரிசி

சென்னை, ஜுன் 19—

இப்போது சென்னை மாநிலத்தில் பல்வேறு இடங்களிலும் சேமித்து வைக்கப்பட்டுள்ள—மத்திய அரசாங்கத்தின் இருப்பாகிய 20,000 டன் நெல்லும் உடனடியாகப் புழுங்கல் அரிசியாகவும், பச்சரிசியாகவும் ஆக்கப்பட்டுச் சென்னை அரசாங்கத்திற்கு விரைவில் அளிக்கப்படும். இந்த அரிசி மணக்கு 16 ரூபாய் வீதம் சென்னை அரசாங்கத்திற்குக் கொடுகக்கப்படும் என்று தெரிய வருகிறது

பத்தாயிரம் டன் அம்மோனிய உரம்

பாகிஸ்தானுக்கு கடன்தர இந்தியா சம்மதம்

புதுடில்லி, ஜுன் 19—

கிழக்கு பாகிஸ்தானுக்கு 10,000 டன் அம்மோனியம் உரம் கடனாகத் தர இந்திய சர்க்கார் சம்மதித்துள்ளதாகத் தெரியவந்திருக்கிறது.

தற்போது இந்தியாவில் ரசாயன உரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தும்கூட பாகிஸ்தானின் அவசரக் கோரிக்கைக்கு இந்தியா இணங்கியிருக்கிறதாம்.

மைசூர் மாநில சர்க்கார் வேலைகள்

இதர மாநிலத்தவரும் பெறலாம்

பெங்களூர், ஜுன் 19—

'மைசூர் மாநில 'பப்ளிக் சர்வீஸ்' வேலைகளுக்கு இனி இதர மாநில வாசிகளும் மனுச் செய்துகொள்ளலாம்,' என்று, மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா தெரிவித்திருக்கிறார்.

மைசூர் மாநிலத்தில் சேரவிருக்கும் பகுதிகளில் உள்ளோரும் மனுச் செய்துகொள்ளலாம் என்றும் அவர் கூறினாராம்.

சென்னைக் கைக்குட்டைகள்

மேற்கு ஆப்பிரிக்காவில் பிரபலமாகின்றனவாம்

சென்னை, ஜுன் 19—

சென்னையிலும், சென்னையைச் சுற்றிலும், ஆந்திராவின் சில ஊர்களிலும் தயாரிக்கப்படும் 'சென்னைக் கைக்குட்டை'கள், நைஜீரியாவிற்கும், கோல்டு கோஸ்டிற்கும் மட்டும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இத்தொழிலில், 50,000 தறிகளில் சுமார் ஒரு இலட்சம் பேர் வேலை செய்து வாழ்கின்றனர்.

இந்தக் 'கைக்குட்டை'களுக்கு நைஜீரியா, கோல்டு கோஸ்டு பிரதேசங்களில் ஏகக் கிராக்கி ஏற்பட்டிருப்பதுடன் அவை மேற்கு ஆப்பிரிக்காவின் இதர பகுதிகளிலும் பிரபலமாகி வருகின்றன என்று, இந்திய கைத்தறி 'போர்டு' உதவி அதிகாரி பத்திரிகையாளரிடம் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

இந்தியா ஆண்டுதோறும் 4 கோடி ரூபாய் பெறுமான கைத்தறி ஆடைகளை ஏற்றுமதி செய்வதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

மற்றொரு அணுகுண்டு பரிசோதனை!

பிரிட்டன் நடத்தியதாம்

பிரிட்டன் மற்றுமோர் அணுகுண்டு பரிசோதனை நடத்தியிருக்கிறது.

கடந்த 19-ந் தேதியன்று மேற்கு ஆஸ்திரேலியாவில் 'பெர்த்' எனும இடத்திற்கு அருகில் உள்ள மாண்டி பெல்லோ தீவில் அணுகுண்டு ஒன்றை வெடித்து பிரிட்டன் சோதனை நடத்தியிருக்கிறது

இதுவரை பிரிட்டன், வெடித்துச் சோதனை நடத்தியுள்ள குண்டுகளில், இப்போது வெடிக்கப்பட்டதுதான் மிகப் பெரியதாகத் தோன்றியது என்றும், அதன் அக்கினிக் கோளம் மற்றவைகளைக் காட்டிலும் மிகப் பிரகாசமாக இருந்தது என்றும் தெரிவித்திருக்கின்றனர், சோதனையைப் பார்வையிட்டவர்கள்!

மூன்றாண்டுகளில் ரூ. 100-கோடி பெறுமான உருக்கு

ரஷ்யாவிடமிருந்து இந்தியா வாங்குமாம்

அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள், 100 கோடி ரூபாய் மதிப்புள்ள உருக்கினை, ரஷ்யா, இந்தியாவிற்கு விற்பனை செய்யும் என்றும், இதற்கான ஒப்பந்தம் ஒன்று கடந்த டிசம்பர் திங்களில் புதுடில்லியில் கையெழுத்தாயிற்று என்றும் தெரியவருகிறது.

திருவில்லிப்புத்தூர், தளவாய்புரம் கூட்டங்களில் அண்ணா

பல்லாயிரக்கணக்கான மக்களிடை இலட்சிய விளக்கம்

இராமநாதபுரம் மாவட்டச் சுற்றுப் பயணத்தின் இரண்டாம் நாளாக 15-6-56 அன்று, திருவில்லிபுத்தூர் நகருக்கு அண்ணா அவர்கள் வருகை தந்தார்கள்.

அண்ணா அவர்கள் நகரில் பேசுகிறார்கள் என்பதை அறிந்த சுற்று வட்டார கிளைக் கழகத்தினர், ஆங்காங்கே, அண்ணா அவர்களின் திருவில்லிபுத்தூர் வருகையை மக்களுக்குத் தெரிவித்து, அண்ணா அவர்களின் கருத்துரை கேட்க வருமாறு அழைப்பு விடுத்திருந்தனர்.

அதன்படி ஏராளமான சுற்று வட்டார மக்களும் திருவில்லிபுத்தூரில் நிரம்பி இருந்தனர்.

அண்ணா அவர்கள், தோழர்கள் மதுரை எஸ். முத்து, இல. மசவுந்திரபாண்டியன், எம். எஸ் இராமசாமி, காஞ்சி-பாபு, முகவை-ஆர். எஸ். பாண்டியன் ஆகியோருடன் மாலை சுமார் 4-45 மணிக்கு வந்து சேர்ந்தார்கள்.

அண்ணா அவர்கள் நகருக்குள் நுழைந்ததும், பதினொரு கழகத் தோழர்கள் கழகக் கொடிகளுடன் சைகிளில் ஏறிக்கொண்டு முன்னேடி, வழிகாட்டிக்கொண்டே சென்ற காட்சி மிக அழகாயிருந்தது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்த மைதானத்தை அண்ணா அவர்கள் நெருங்கிய போது, மக்களின் பேரார வாரம் வானைப் பிளந்தது.

கூட்டம் 7 மணி அளவில் துவங்கிற்று. கூட்டத்திற்கு நகரக்கிளைச் செயலாளர் தோழர் குருசாமி தலைமை தாங்கிப்பேசினார்.

அடுத்து தோழர் எம். எஸ் இராமசாமி அவர்கள், தி. மு கழகம் ஒரு தேசிய இயக்கம் என்பதை விளக்கிப் பேசினார்.

பின்னர் பேசிய தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன், திருச்சி மாநில மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கினார்.

அடுத்துப் பேசிய தோழர் எஸ். முத்து அவர்கள் 'சமுதாயத் துறையில் கழகத்தின் பணி' குறித்து வீரமிக்க உரை நிகழ்த்தினார்.

இறுதியாக அண்ணா அவர்கள், இன்றைய அரசியல் நிலை குறித்தும், கழகம் தேர்தலில் ஈடுபடும் நோக்கம் குறித்தும், திராவிட நாடு இலட்சியம் குறித்தும் அரியதோர் கருத்துரை வழங்கினார்கள்.

அண்ணா அவர்கட்குப் பல்வேறு மன்றங்கள், கழகங்கள், தனிப்பட்டோர் சார்பில் வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டதுடன், கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி நவிலலுடன் கூட்டம் முடிவுற்றது.

கழகத் தோழர்கள் அளித்த உணவு அருந்திவிட்டு, அண்ணா அவர்கள் இதர தோழர்களுடன இரவு சுமார் 9-45 மணிக்கு தளவாய்புரம் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகப் புறப்பட்டார்கள்.

தளவாய்புரம்:

ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து சுமார் 28 மைல் தொலைவிலிருக்கும் தளவாய் புரத்திற்கு அண்ணா அவர்கள் சுமார் 10-30 மணிக்கு வந்து சேர்ந்தார்கள்.

தளவாய்புரம் வந்து சேருவதற்கு இடையில் வழியில் உள்ள முகவூர், முத்துச்சாமிபுரம் ஆகிய ஊர்களில் அண்ணா அவர்களுக்கு வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டு, கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

அண்ணா அவர்கள் அந்த இரு ஊர்கள் வழியே வரும்போது, மக்கள்—ஏராளமான தாய்மார்கள் உட்பட சாலையின் இருமருங்கிலும் அந்த இரவில் கூடிநின்று வாழ்தொலிகள் எழுப்பி, தங்கள் ஆர்வத்தைத் தெரிவித்துக்கொண்டனர்.

இரு ஊர்களிலும் அண்ணா அவர்கள் கழகக் கொடியை உயர்த்தி வைத்தார்கள்.

தளவாய்புரத்தில், பல்லாயிரக் கணக்கான மக்கள், அண்ணா அவர்களின் கருத்துரை கேட்க ஆவலோடு கூடியிருந்தார்கள்.

கூட்டம் இரவு 10-45 மணிக்குத் துவங்கிற்று.

கடந்த 20 ஆண்டுக் காலமாகவே சுயமரியாதைக் கருத்துக்களை இந்த வட்டாரத்தில்பரப்பிவரும் தோழர் மாரியப்பா அவர்கள், கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

தோழர் எம் எஸ். இராமசாமி அவர்கள், துவக்கத்தில் பேசும் போது, தி மு கழக இலட்சியத்தை விளக்குகையில், ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னாட்டிற்கு இழைக்கப்படும் அநீதிகளைப் புள்ளி விவரங்களுடன் விளக்கிக் காட்டினார். பொருளாதார அபிவிருத்திக்கு வடநாட்டில் மட்டுமே டெல்லி சர்க்காரால், ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்பதையும், திராவிட மக்கள் வாழ்வில் முன்னேற திராவிட நாடு திராவிடருக்கு ஆக வேண்டுமென்பதையும் விளக்கிக் கூறினார்.

அடுத்துப் பேசிய தோழர் முகவை - ஆர் எஸ். பாண்டியன், நம் நாட்டு மக்கள் தங்களை அறிந்து கொள்ளாதிருப்பதினால்தான், 'உலகே மாயம்; வாழ்வே மாயம்; வாழ்வில் காணும் சுகங்கள் எல்லாம் மாயம்'—என்ற பாழான மதத் தத்துவங்களுக்கு அடிமைப்பட்டு, வாழ்வில் பற்றும்-பாசமும்-பிடிப்பும் அற்றவர்களாகி வாழ்வை வெறுத்தொக்கிடப்படுவதின் விளைவாகத்தான், தங்கள்வாழ்வின் நலன்களை-செல்வங்களைப் பிறர் சூறையாடிச் செல்வதை—கொள்ளையிட்டுச் செல்வதை உணரமுடியாதவர்களாயுள்ளனர் என்பதை எடுத்துக்காட்டி, மத, கடவுள் மூடநம்பிக்கைகளைக் கைவிட்டு, பகுத்தறிவு உணர்வு பெற்று, 'வாழத்தான் பிறந்தோம்' என்ற எண்ணங்கொண்டவர்களாக மாறினால்தான், வாழ்வைப் போராடியேனும் பெறமுடியும் என்று எடுத்துரைத்தார்.

அடுத்துப் பேசிய தோழர் மதுரை எஸ். முத்து அவர்கள், இன்றைய அரசியல் நிலைகளைக் குறித்து விளக்கம் தந்து, அரசியல் துறையில் கழகத்தின் குறிக்கோளை விளக்கிக்காட்டினார்.

இறுதியாக அண்ணா அவர்கள் கழகம், நாட்டு மக்களின், சமுதாய—பொருளாதார—அரசியல் பிரச்சினைகளுக்காக, ஒருசேரப் போராடும்—பாடுபடும் இயக்கம் என்பதை முன் பேசிய தோழர்கள் விளக்கிக் கூறியதைக் குறிப்பிட்டு, கழக இலட்சியத்திற்கு மேலும் புதிய விளக்கங்களை அளித்தார்.

தேர்தலில் கழகம் ஈடுபடுவது கண்டு, கிலி கொண்டிருக்கும் காமராசர்களின் போக்கைச் சுட்டிக் காட்டி, அரசியல் நிலைகளையும் தெளிவாக்கி அரியதோர் கருத்துரை வழங்கினார்.

அண்ணா அவர்களுக்கும், இதர தோழர்களுக்கும் ஏராளமான கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

கூட்டம் நடுநிசியில், இரவு 2 மணிக்கு முடிவுற்றது. அதுவரையில், எண்ணற்ற தாய்மார்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்களும் அமைதியுடனிருந்து, கருத்துக்களைக் கேட்டுப் பயன்பெற்றனர்.

தலைவர் முடிவுரையுடன், நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது

அண்ணா அவர்கள் உள்ளூர் கழகத் தோழர் ஒருவரின் இல்லத்தில் கழக வளர்ச்சி குறித்தும், எதிர்காலப் பணி குறித்தும் உரையாடி விட்டு, தளவாய்புரத்தை விட்டுப் புறப்பட்டார்கள்.

அம்பர் இராட்டை நூல் கைத்தறிக்கு உகந்ததாம்

குழுவின் சிபாரிசுகளை சர்க்கார் ஏற்றுக்கொண்டதாம்

புதுடில்லி, ஜூன் 19—

"'அம்பர் இராட்டை' நூல் ஒரே சீரான இழையாகவும், உறுதியாகவும், கைத்தறி நெசவுக்குத் தகுதி வாய்ந்ததாகவும் இருக்கிறது,"

என்று, அம்பர் இராட்டை விசாரணைக் குழு கருத்து அறிவித்துள்ளதாம்.

'நடப்பு நிதி ஆண்டில், 75,000 அம்பர் இராட்டைகளை உபயோகத்திற்குக் கொண்டுவரவேண்டும்,' என்று, குழு சிபாரிசும் செய்துள்ளதாம்!

இந்தக் குழு தந்த சிபாரிசுகளை டில்லி சர்க்காரும் ஒப்புக்கொண்டு விட்டனராம்.

'அம்பர் நூல் நெசவிற்கெனத் தனியாக புது கைத்தறிகள் வைப்பதற்குப் பதில், இயன்றவரை இப்போதுள்ள கைத்தறிகளிலேயே அம்பர் நூல் நெய்யும்படி செய்யும் வகையில் அம்பர் திட்டத்தை உருவாக்கவேண்டும்' என்று குழு சிபாரிசு செய்திருக்கிறதாம்.

'நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு அம்பர் இராட்டையில் நூல் நூற்பதற்குப் பயிற்சி தரவேண்டும்; இதரர்களுக்கு அம்பர் இராட்டைகளை வழங்குவதைவிட நெசவாளர்களுக்கே வழங்கலாம்' என்றும் குழு கருத்து அறிவித்துள்ளதாம்.

'நெசவுக்காக உற்பத்தி செய்யும் அம்பர் நூல் நூற்பாளர் வீடுகளில் மட்டுமே தயாரானதாக இருக்க வேண்டும்; நூற்பு—கேந்திரங்களில் தயாரானதாக இருத்தலாகாது,' என்றும் குழு தெரிவித்திருக்கிறதாம்.

'அம்பர் இராட்டை திட்டத்தின் ஒரு பகுதியாக, பழைய கைராட்டைகளுக்குப் பதில், படிப்படியாக அம்பர் இராட்டைகளைக் கொண்டு வரவேண்டும்; இப்போதுள்ள கதர் நெசவுத் தறிகளும், அம்பர் நூல் தறிகளாக மாற்றப்பட வேண்டும்; அடுத்த கட்டத்தில், இப்போது கதர் நூற்பவர்களுக்கு அருகில் ஆலை நூல் உபயோகிக்கும் கைத்தறிகளும், அம்பர் நூலுக்கு மாறும்' என்றும், குழு, அம்பர் இராட்டைத் திட்டம் பற்றிக் கருத்தறிவித்திருக்கிறதாம்

வெளிநாட்டுத் தலைவர்கள் இந்தியா வருகை

புதுடில்லி, ஜூன் 20—

வரும் நவம்பர் — டிசம்பரில் எதியோப்பிய மன்னர், சிரியா நாட்டு குடியரசுத் தலைவர், இந்தோனேஷியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சுகர்ணோ ஆகியோர் இந்தியா வருவர் என்று தெரிய வருகிறது

இந்தியாவின் ஏற்றுமதிகளின் மதிப்பு 1954-ல் ரூ. 604 கோடியாக அதிகரித்தது.

செய்திச் சுருள்

சென்னை—வண்ணை இளங்கோ கலை மன்றம்

சிறுவர்—சிறுமியர் விழா

17—6—56 காலை 9 மணியளவில் தோழர் மு. செல்லப்பன் தலைமையில், மேற்படி மன்றச் சார்பில் சிறுவர்—சிறுமியர் விளையாட்டுப் போட்டியும், மாலை 6 மணிக்கு, தோழர் க. கணேசன் தலைமையில் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு தோழர் சொர்ணம் அவர்களால் பரிசளித்தலும் நடைபெற்றது.

பின்னர், தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், ஏ எஸ் வேணு, கே. எம். கண்ணபிரான், மு. நடராசன், கோ. கு. சேகர், வெ அண்ணாமலை ஆகியோர் 'குழந்தைகளின் எதிர்காலம்' எனும் பொருள் பற்றி பேசினர்.

காவியக் கலை அரங்கம் திறப்பு விழா

17—6—56 மாலை சென்னை—இராயபுரம் ஆண்டியப்ப கிராமணி தெருவிலுள்ள 'மலர்' இதழ் அலுவலகத்தில் 'காவியக் கலை அரங்கம்' துவக்க விழா தோழர் என். வி. மதிவண்ணன் தலைமையில் நடைபெற்றது. மன்றத்தை தோழர் வே. கபிலன் திறந்து வைத்தார்.

மன்றத்திற்கு கௌரவத் தலைவராக தோழர் எஸ். எஸ். பி லிங்கம்; தலைவராக தோழர் வி. டி. லாசர்; செயலாளராக தோழர் டி. பி. எஸ். மணி; துணைச்செயலாளராக தோழர் என். வி. மதிவண்ணன்; பொருளாளராக தோழர் கோ. செயராமன் ஆகியோரும், செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். விழாவுக்கு வருகை தந்த அனைவருக்கும் தேநீர் விருந்தளிக்கப்பட்டது.

சென்னை மூலக்கொத்தளம் அழகிரி மன்றம்

17—6—56-ல் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில், புதிய வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டும், செயலாளர் விலகுதலை ஏற்றுகொண்டதுடன் புதிய செயலாளராக தோழர் ஆர். ஏழுமலை தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர், அழகிரி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் எத்திராசு அம்மையார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

நாடாளுபவர்களின் நான்கு அம்சத் திட்டம்

புதுடில்லி, ஜூன் 18—

நபருக்கு 18½ கெசம் துணி என்ற அடிப்படையிலும், ஏற்றுமதிக்கு 100 கெசம் தேவை என்ற அடிப்படையிலும் அதிகமாக 170 கோடி கெசம் துணி உற்பத்திச் செய்வதற்கு நான்கு அம்ச திட்டம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது:—

1. கைத்தறிக்கு ஆலை நூல் மூலம் 70 கோடி கெசம் துணி ஒதுக்கப்படும்.
2. 'அம்பர் சர்க்கா' நூல் மூலம் கைத்தறிக்கு 30 கோடி கெசம் ஒதுக்கப்பட்டுள்ளது.
3. கைத்தறிப் பகுதியில் விசைத் தறியை ஏற்படுத்தி 20 கோடி கெசம் உற்பத்திச் செய்யப்படும்.
4. ஏற்றுமதிக்காக துணி ஆலைகளை முன்னேறச் செய்து அத்துறைக்கு 35 கோடி கெசம் ஒதுக்கப்படும்.

170 கோடியில் இன்னும் 15 கோடி எந்தத் துறைக்கும் ஒதுக்கப்படாமலிருக்கிறதென்றும், எதிர்கால நிலைமைக்கேற்றவாறு இது ஒதுக்கப்படுமென்றும் மத்திய அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அறிவித்துள்ளார்.

சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றம்

17—6—56 காலை 10 மணியளவில், சென்னை - இராயபுரம் மாதா கோவில் முன்னுள்ள 'சிங்காரவேலர் பகுத்தறிவு மன்ற'த்தை இராயபுரம், பனைமரத் தொட்டியில் நிறுவுதல் பொருட்டு, தோழர் தி. க. மதிவாணன் தலைமையில் ஓர் அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது, தற்காலிக நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :- தோழர்கள் சி. இளங்கோ - செயலாளர்; கு. இராமலிங்கம்—துணைச்செயலாளர்; சி. ஞானசேகரன் - பொருளாளர்; இரா. பன்னீர்செல்வம் - துணைப்பொருளாளர்; தி. க. மதிவாணன் - பொறுப்பாளர். ஆகஸ்டு மாதத்தில் திறப்பு விழா நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

தேனி நெடுஞ்செழியன் மன்றம்

15—6—56-ல் தோழர் மு. தங்கராசன் தலைமையில், மன்றக் கூட்டம் நடைபெற்றபோது தேனி கலவர நினைவு நாளாக 4–7–56-ம் நாளைக் கொண்டாட வேண்டுமென்றும், சந்தை மைதானத்தைக் கூட்டம் நடத்த அனுமதி தந்த மதுரை மாவட்டத்தலைவர்தோழர் எம். எஸ். சிங்காரயரைப் பாராட்டியும், நினைவு நாள் கொண்டாட்டத்தை சிறப்பாக நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

தேநீர் விருந்தும்—பாராட்டு விழாவும்

முத்துப்பேட்டை கழக உயர் நிலைப்பள்ளியில், ஊராண்மைக் கழகத்திற்குப் போட்டியின்றித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற தோழர் ஏ. கே. எல். தம்பிமரைக்காயர் அவர்களுக்கும், உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற தோழர்கள் கே. எஸ். காதர் முகயதீன், வி. பக்கிரிசாமி, ஜே. காதர் உசேன், வ. இராமனுதன், என். ஐதுருஸ், என். எம். தாதா அப்துல் காதர், பாதுஷா, இராமச்சந்திரன், க. அ. பழனிவேல், வேலன் ஆகியோருக்கும், முத்துப்பேட்டை தி. மு. கழகச் சார்பில் தேநீர் விருந்தும், தோழர் க. தருமலிங்கம் தலைமையில் பாராட்டு விழாவும் நடைபெற்றது.

அனைவருக்கும், தோழர் பி. இராமானுசம் மலர் மாலைகள் அணிவித்தார்; தோழர் க. சுப்பையன் தமிழ் வாழ்த்துப்பாடினார். தோழர்கள் ப. நாகஇரத்தினம், ஆர். தட்சணாமூர்த்தி, பிச்சைத்தம்பி, அரு. மு. கணபதி, கு. கருப்பையன், மு. கல்யாணராமன், ஜி. சி. நடராசன், ஆர். நடராசன், அகமது லெப்பை ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். இறுதியில் ஊராண்மைக் கழகத் தலைவர், பாராட்டுக்கு நன்றி தெரிவித்தார்; உறுப்பினர்கள் சார்பில் தோழர் வ. இராமனுதன் நன்றி தெரிவித்தார்.

துவக்கப்பள்ளி புதுக் கட்டிடத் திறப்புவிழா

8-6-56 காலை 9 மணியளவில் சூரப்பள்ளி துவக்கப்பள்ளி புதுக் கட்டிடத் திறப்புவிழா ஓமலூர் டிப்டி தாசில்தார் தலைமையில் நடைபெற்றது. தோழர் காளியண்ணன் (கவுண்டர்) புதுக் கட்டிடத்தை திறந்து வைத்தார் தோழர் ஏ. சவுண்டப்பன் (செட்டியார்) கொடியேற்றி வைத்தார். தோழர்கள் வி. எஸ். கே. இராமநாதன் பா. செல்லப்பன் ஆகியோர் தோழர்காளியண்ணன்(கவுண்டர்) அவர்களுக்கு வரவேற்பு இதழ்கள் வாசித்தளித்தனர்.

தோழர்கள் காளியண்ணன், இரா. தாண்டவன், அர்த்தநாரி, எம். ஏ. சாமி, டி. என். டி. பெருமாள் (செட்டியார்) ஆகியோர் துவக்கப்பள்ளியின் திறப்பு விழாவைப் பாராட்டிப் பேசினர்.

சி. ஆர்.-சுப்பிரமணியம் கோஷ்டிக்குப் பேரிடி!

பரமக்குடியில் அண்ணு முழக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாயத்து போர்டு வீட்டுவரி வாங்குகிறது.

"நிலமிருந்தால், சர்க்கார் நிலவரி வாங்குகிறது; சாமான் வாங்கினுல் விற்பனைவரி வாங்குகிருர்கள்; இப்படி இந்த மூன்று வரியும் தவிர ஏனைய வரிகள்-நம்மிடமிருந்து வசூலிக்கப்படுபவை எல்லாம்—மிளகு, ரப்பர், காப்பி, தேயிலை, புகையிலை ஏற்றுமதி இறக்குமதி, வருமானம் ஆகிய கொழுத்த வரிகளை எல்லாம் டில்லி சர்க்கார் பெற்றுக்கொள்கிறது.

"நாம் இங்கே கை வண்டி இழுத்து, கட்டைவண்டி ஓட்டி, விறகு பிளந்து, கைத்தறியில் நெய்து, ஆலையில் உழன்று, கடையில் உட்கார்ந்து பாடுபடுகிறேம்; இப்படிப் படாத பாடுபடும் நம்மிடமிருந்து வாங்கப்படுகிற வரி அத்தனையும் டில்லிக்குப்போய் விடுகிறது.

இது நியாயமா? இது, டில்லிக்கு நாம் அடிமைப்பட்டிருக்கிறேம் என்பதைக் காட்டவில்லையா?

"சில காங்கிரசார் சொல்லக்கூடும்—'வாங்குகிற வரி பணத்தை நாட்டவருக்குத் தானே டில்லி சர்க்கார் செலவிடுகிறது?'—என்று! உண்மைதான்; ஆனல், வடநாட்டவர் வளர்ச்சிக்கு—முன்னேற்றத்திற்கு டில்லி அந்தப் பணத்தைச் செலவிடுகிறது?

"1947-க்குப் பிறகு, தென்னுட்டில் ஒரு புதிய தொழிற்சாலை நிறுவியிருக்கிருர்கள் என்று காட்ட முடியுமா? மதுரையில்—பரமக்குடியில்—தூத்துக்குடியில் தொழிற்சாலைகள் எழும்பியுள்ளன என்று ஒரு விரலை மடக்க முடியுமா, காங்கிரசார்? ஆனல், அதே நேரத்தில், வடநாட்டில் எத்தனை பெரிய தொழிற்சாலைகள்? எத்தனை பிரம்மாண்டமான அணைக்கட்டுகள் எல்லாம் எழும்பியுள்ளன?

"எழெட்டு மாதங்களுக்கு முன்னுல் டெல்லியில் ஒரு கண்காட்சி சாலை வைத்தார்கள்; 22 நாடுகளைச் சேர்ந்தவர்கள் — உலகெங்கிலுமிருந்து அந்தக் கண்காட்சியில், தங்கள் தங்கள் நாட்டு தொழில் வளம் காட்டும் அற்புதமான இயந்திரங்களைக் குவித்து வைத்திருந்தார்கள்.

"200 ஏகரா நிலத்தில் ஏற்பாடாகியிருந்த அந்தக் கண்காட்சியில் 'கண்ணுடி மனிதன்' என்றெரு பொருள் இருந்தது; மனிதனுடைய சகல அங்கங்களும்—மூளை, இருதயம், தசைநார்கள், இரத்த ஓட்டம் இவை எல்லாம் எப்படி இயங்குகின்றன என்பதை, அந்தக் 'கண்ணுடி மனிதன்' மூலம் காண முடிந்ததாம்! இப்படிப்பட்ட அரிய விஞ்ஞான வளர்ச்சிகளைக் காட்டும் அந்தத் தொழிற் கண்காட்சியில், இந்தியாவும், தனது தொழில்கள் பற்றிய காட்சிப் பொருள்களை வைத்திருந்ததாம்!

"வடநாட்டில் இப்படி ஒரு கண்காட்சி. அதில் நேரு, இராஜேந்திர பிரசாத் முதலானேர் கலந்து கொண்டனர்.

"இப்போது, காஞ்சிபுரத்தில் சில நாட்களுக்கு முன் ஒரு கண்காட்சி வைத்தார்கள். அந்தக் கண்காட்சியிலும் பிரசாத், காமராசர் போன்ருர் கலந்து கொண்டனர், இங்கே நடைபெற்ற அந்தக் கண்காட்சிக்கு 'சர்வோதயக் கண்காட்சி' என்றுபெயர்! இங்கே காட்சியாகக் காட்டப்பட்டதெல்லாம் என்ன தெரியுமா?

"நாட்டுச் செக்கில் எண்ணெய் ஆட்டுவது எப்படி—கை படாமல் பனை வெல்லம் தயாரிப்பது எப்படி—நோகாமல் பாய் முடைவது எங்ஙனம்—கோழி அடை காக்காமல், முட்டையிலிருந்து குஞ்சு பொறிக்க வைப்பது எவ்வாறு—தேனீ வளர்ப்பு எத்தனை அவசியமானது — என்பதை எல்லாம் விளக்குவதற்கான காட்சிப் பொருள்களை வைத்திருந்தார்கள்.

"அங்கே, நவீன விஞ்ஞானத் தொழில் நுணுக்க வளர்ச்சியைக் காட்டும கண்காட்சி! இங்கே — தெற்கே, கிராமத் தொழில்கள், குடிசைத்தொழில்களை விளக்கும் கண்காட்சி!

"மிராசுதார் ஒருவர், தன்னுடைய பண்ணையாள் கந்தனுக்கு, கம்பங்கூழில் உள்ள சத்து வகைகளை விளக்கிவிட்டு, வீட்டிற்குள் சென்று, கிச்சிலிச்சம்பா சோறும்,நெய்யும் பருப்பும், பாயசமும் வடையும் சாப்பிடுவதைப் போல்தானே உள்ளது, தென்னுட்டவருக்குக் குடிசைத் தொழிலின் மகாத்மியங்களை எடுத்துரைத்துவிட்டு, வடநாட்டில் பெரும் தொழில்களை நிறுவிவரும் டில்லியின் போக்கு? இவ்வளவு பெரிய ஓரவஞ்சனைக்குத் தென்னுடு ஏன் ஆளாக வேண்டும்?

"இன்றைய டில்லி வடநாட்டை சீமையாக்கிவிட்டு, தென்னுட்டை கிராமமாக்கத் தானே, திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி வருகிறது.

"இப்படி, டில்லியிடம் அதிகாரங்கள் — டில்லியிடம் நமது வரிப்பணம்—டில்லியின் விருப்பப்படி வடநாட்டில் மட்டுமே தொழில்கள் என்றிருந்தால், தென்னுட்டவர் வாழ்வது எப்படி?

"கண்ணைக் கட்டிவிட்டு, 'அழகு ததும்பும் ஓவியத்தைப் பார்' என்பதும், காய்ச்சிய அரக்கை காதில் ஊற்றிவிட்டு, 'இனிய இசையைக் கேள்' என்பதும் என்ன நியாயம்?

"இந்தக் காரணங்களினுல்தான், இந்த நாட்டவரை ஆளும் அதிகாரம், இந்த நாட்டவரிடத்தில் இருக்க வேண்டும் என்கிறேம்; இங்கு வசூலிக்கப்படும் வரிப் பணம் இங்கே உள்ள மக்களுக்கே செலவிடப்பட வேண்டும் என்று வற்புறுத்துகிறேம்; அதற்கு, திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும் என்று நாம் கூறுகிறேம்.

"பல மாகாணங்களிடமிருந்தும் டில்லி சர்க்கார் வாங்குகிற வரிப் பணத்தை, ஒழுங்காகவாவது செலவிடுகிருர்களா என்றுல், அதுவும் இல்லை.

"மொத்தம் சுமார் ரூ. 400 கோடிவரை, வரியாக டில்லி வாங்குகிறது.

"சில தினங்களுக்கு முன்பு, டாக்டர் லோகியா ஒரு கணக்குக் கூறினர்—'நேருவுக்காக மட்டும், அரசாங்கப் பணம், சராசரியாக நாள் ஒன்றுக்கு, ரூ. 50 ஆயிரம் செலவிடப் படுகிறது'—என்று!

"இதுவன்னியில், வெளிநாட்டில் தூதுவர்கள் பாழாக்கும் ஏராளமான தொகை! கணக்கற்ற டில்லி மந்திரிகளுக்குப் பெருந் தொகைகள் செலவு!

"இந்தமாதிரி பாழாகும் பணம் எல்லாம், நம்முடைய நாட்டு உழைப்பாளர்கள் படாதபாடுபட்டுச் சம்பாதிப்பதிலிருந்து வரியாக வாங்கப்படுவதாகும்.

"மொத்தம் கிடைக்கும் ரூ. 400 கோடி வரிப் பணத்தில், பட்டாளத்திற்கு மட்டும் ரூ. 200 கோடி செலவிடுகிறது டில்லி! சரிபாதி அளவை பட்டாளத்திற்குச் செலவிட்டுவிட்டு, எஞ்சியுள்ளதை வடநாட்டின் வளர்ச்சிக்கு செலவிடுகிறது டில்லி! 'மீதி இருந்தால் எங்களுக்கும் கொஞ்சம் தாருங்கள்' என்று காமராசர்கள் கெஞ்ச வேண்டியுள்ளது! இந்த நிலை எதற்காக? இங்கே உள்ள 'சோடே' சர்க்கார், டில்லியில் உள்ள 'படே' சர்க்காருக்குக் கட்டுப்பட்டதாக இருப்பதால் தானே!

"இந்த நிலை மாறத்தான், தி. மு. கழகம் சொல்லுகிறது - 'நமக்கென ஓர் எல்லை; அந்த எல்லைக்குள் நம்மவர் ஆட்சி வேண்டும்'—என்று! இப்படி ஒரு எல்லையும், ஆட்சியும் நாம் கேட்பது புதிது ஒன்றுமல்ல; நாம்— நமது முன்னேர்கள் பெற்றிருந்தவைதான்! அந்தச் சுதந்திரத்தைத்தான் இப்போது நாம் கேட்கிறேம்.

"நான் சில தினங்களுக்கு முன்பு, வினேபா பாவேயைச் சந்தித்தேன்; அப்போது அவர், நமது கழக இலட்சியம் குறித்துக் கேட்டுவிட்டு, 'இப்படிச் சிறிய சிறிய நாடுகளாக இந்தியா ஆகிவிட்டால், பெரிய நாடுகள் அவற்றைப் பிடித்துவிடாதா?'—என்று என்னிடம் கேட்டார்.

"நான் கூறினேன் — 'நீங்கள், உபதேசித்து வருகிற அன்பு, அகிம்சை, ஆத்மசக்தி, நேர்மை இவை எல்லாம் உலகத்தில் வளர்ந்துவிடாமலா போகும்? அப்போது சிறிய நாடுகளைப் பெரிய நாடுகள் பிடிக்கும் என்ற நிலை எப்படி வரப்போகின்றது?'—என்று!

"உலகில் எத்தனையோ சின்னஞ்சிறு நாடுகள், இன்று இல்லையா? ஐரோப்பாவை எடுத்துக்கொண்டால், அங்கே போர்ச்சுகல், ஸ்பெயின், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, கிரீஸ், துருக்கி, நார்வே, பெல்ஜியம், டென்மார்க் — இப்படி எத்தனையோ சின்னஞ்சிறு நாடுகளிருக்கின்றனவே!

'சின்னஞ் சிறு பிள்ளைகளை— பள்ளிப்பிள்ளைகளை நாம் கெடுத்துவிடுகிறேம் என்று கூறுகிருர்கள் அல்லவா? அந்தப் பள்ளிப் பிள்ளைகளைக் கேட்டால் அவர்கள் கூறுவர்—உலகில் எத்தனை சின்னஞ்சிறு நாடுகள் உள்ளன என்று!

"நம்முடைய திராவிடம் ஒன்றும் சின்னஞ்சிறு நாடு அல்ல! அல்லது, வாழ்வதற்குத் தேவையான வளங்கள் அற்றதும் அல்ல!

"செக்கோஸ்லேவேகியா— 'டார்ச் லைட்டு'களைச் செய்து உலகிற்கு வழங்கி வாழ்கிறது!

"சுவிட்சர்லாந்து—கைக் கடிகாரங்களை மட்டுமே உற்பத்தி செய்து வாழ்கிறது!

"பின்லாந்து—காகித உற்பத்தியால் ஜீவிக்கிறது!

"'சென்ட்' வகைகளாலேயே வாழும் நாடு உண்டு!

"சாராயம் காய்ச்சியே காலந் தள்ளும் நாடும் இருக்கத்தான் செய்கிறது!

"எந்த நாட்டிலும் கிடைக்கிற எந்தவளமும் தமிழ் நாட்டில்—திராவிடத்தில், கிடைக்கத்தான் செய்கிறது!

"அப்படியிருந்தும் நம் நாட்டு மக்கள், வடவர் அரசியல்—பொருளாதார ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டிருப்பதால் அல்லவோ, வாழ முடியவில்லை?

"பெரிய நாடு என்ற பெருமை மட்டும், ஒரு நாட்டை வாழவைக்காதே!

"பகவான் பத்து முறை இந்தப் புண்ணிய நாட்டில்தான் அவதாரமெடுத்தார்; ஆனலும், இந்த நாட்டில் ஒரு குண்டூசிகூடச் செய்ய முடியாதவர்களாகத்தானே இருந்தோம்!

"எனவே, ஒரு நாடு, பெரிதா—சிறிதா என்பதல்ல பிரச்னை; அந்த நாட்டு மக்களின் மனம் பெரிதா—சிறிதா? அவர்களின் அறிவு சிறிதா—பெரிதா? என்பதுதான் முக்கியம!

(பேச்சு முடியவில்லை)

'தட்சிண பிரதேச அமைப்புக்கு இது உகந்த தருணமல்ல'

'முதலமைச்சரை வீழ்த்த இப்பிரச்னையை கருவியாகச் சிலர் கையாளுகின்றனர்'

'இக்கிளர்ச்சி விஷமத்தனம் — வன்மையாகக் கண்டிக்கத்தக்கது'

சேதுபதியின் விசுவாச முகாம் மாறுகிறது!

சென்னை, ஜூன் 20—

"தட்சிணப் பிரதேசம் சம்பந்தமாக எனது கொள்கைகள் பொதுமக்களில் சிலரிடையே தவருன எண்ணங்களை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. தட்சிணப் பிரதேச அமைப்பு தமிழ் நாட்டவருக்கு நன்மை பயக்கவல்லது என்றே நான் நம்புகிறேன். ஆனல், தட்சிணப் பிரதேச அமைப்புக்கு இன்றுள்ள நிலைமை சரியானதல்ல என்பதையும் நான் திட்டமாக விளக்கிக் கூறியிருக்கிறேன். பொது மக்களின் எண்ணம் தட்சிணப் பிரதேச யோசனைக்கு ஆதரவு தருவதாக இல்லை என்பதையும் உணர்ந்துள்ளேன். இம்மாதிரியான பிரச்சினைகளில் மக்களின் கருத்துக்கு விரோதமாகப் போவது விவேகமல்ல!

"சுயநல நோக்கங் கொண்ட சிலர், எனது கருத்துக்களை மிகைப்படுத்தி முதலமைச்சருக்கும் எனக்குமிடையே பிளவு உள்ளதாகக் கருதும் வகையில் பிரச்சாரம் செய்வது கண்டு நான் வருந்துகிறேன்; இச்செயல் விஷமத்தனமாகும். முதலமைச்சரிடம் நான் கொண்டுள்ள விசுவாசம் எப்பொழுதுமே உறுதியாக இருக்கிறது. எத்தகைய கட்டுப்பாடு ஒற்றுமையையும் குலையச் செய்பவனல்ல நான்.

"தட்சிணப் பிரதேச அமைப்பினுல் நன்மை உண்டென உண்மையாக நினைப்பவர்கள் உண்டு; ஆனுல், அதே நேரத்தில், துரதிஷ்டவசமாக மற்றும் சிலர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு முதலமைச்சருக்கு எதிராக அர்த்தமற்ற—நேர்மையற்ற கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தக் கிளர்ச்சி கடுமையாகக் கண்டிக்கத்தக்கதாகும். இத்தகு பிரச்சாரங்களில் ஏமாருமல் தமிழக மக்கள் விழித்துக் கொண்டிருப்பார்கள் என உறுதியாக நம்புகிறேன்"

என்று, சென்னை மராமத்து அமைச்சர் சண்முக ராசேசுவர சேதுபதி, பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் கூறுகிருர்.

சென்னை 3-வது வட்ட தி.மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

22—6—56 இரவு 7 மணியளவில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

நிலாச் சோறு விழா

22—6—56 மாலை 6 மணியளவில் மயிலை-சிவ முத்து தலைமையில் குழந்தைகள் 'நிலாச்சோறு ஆக்கும் விழா,' சென்னை மூலகொத்தளம் சாகிபுத் தெரு, 32-ம் எண்ணுள்ள இல்லத்தின் மேல் மாடியில் திறந்த நிலா வெளியில் நடைபெறும்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குற்றச் சட்டப்படி, பாக்வாரா போலீசார், சூப்பிரண்டெண்ட் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளனர்; இச்சட்டத்தின் கீழ், பெப்சுவில் வழக்கு தொடரப்படுவது இதுவே முதல் தடவையாகும்

குற்றமுள்ள நெஞ்சு......

(1-ம் பக்கத் தொடர்சசி)

அவர் மேலும் பேசும்பொழுது, பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் குழு நிறைவேற்றியுள்ள நாட்டில் வளர்ந்துவரும் பலாத்காரக் கண்டனத் தீர்மானத்தின் கருத்தை விளக்கிவிட்டு, அதை ஆணித்தரமாகக் கண்டித்த கம்யூனிஸ்டு கட்சியின் நிலைகுறித்தும் அறிவித்துள்ளார்.

"தீங்கற்ற அத்தீர்மானத்திற்கு எதிராக இந்திய கம்யூனிஸ்டு கட்சி குரல் எழுப்பி இருப்பது கண்டு நான் வியப்புறுகிறேன். கம்யூனிஸ்டுகள் உள்ளுக்குள்ளாகத் தங்களைக் குறறவாளிகள் என உணருகின்றனர். எனவே, குற்ற உணர்வு பெற்ற எவரும் தன்னுடைய நிழலையே கற்றறிவது எப்பொழுதும் நிகழக்கூடியதாகும்."

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.